RNI-N0: TNTAM/2021/83936

Postel Regd. No: TN/5/SVA/2023-2025




# மாலை தந்தி
MALAI THANTHI

தமிழால் வெல்வோம்

DAILY EVENING

மாலை நாளிதழ்




சிவகங்கை | மலர்-4 | இதழ்-50 | 23 பிப்ரவரி ஞாயிற்றுக்கிழமை | malaithanthi2020@gmail.com | 4 பக்கங்கள் | விலை ரூ. 5

## "நாதகவுக்கு இது களையுதிர் காலம்!" காளியம்மாள் விலகல் சலசலப்புக்கு சீமான் பதில்

சென்னை, பிப்.23

மதுரையில் செய்தியாளர்களிடம் அவர் கூறும்போது, இந்தி என்ற ஒற்றை மொழியை திணித்து இந்த நாட்டை கூறு போட துடிக்கிறீர்கள் எனக் குற்றம்சாட்டுகிறேன். மொழியை வைத்து நாட்டை கூறுபோட துடிப்பது நீங்களா? நாங்களா?

எங்களுக்கு நிதி வரவில்லை என்று எத்தனை நாட்களுக்கு கூறிக் கொண்டிருப்பது? என்னுடைய மாநிலத்திலிருந்து ஒரு ரூபாய் நிதி கூட வராது என்று சொல்ல முடியாதா? மாநிலங்களின் நிதிதான் மத்திய அரசின் நிதி. ஒன்றிய அரசுக்கு நிதி ஏது? இதைச் செய்தால்தான் நிதி ஒதுக்குவோம் என சொல்வது கொடிய போக்கு. இது எப்படிப்பட்ட அணுகுமுறை?!"



என்றார்.

காளியம்மாளின் கட்சி விலகல் குறித்த கேள்விக்கு பதிலளித்தவர், "நாம் தமிழர் கட்சியில் முழு சுதந்திரம் இருக்கிறது. விரும்பி இயங்குவதற்கும், விருப்பம் இல்லையெனில் வெளியேறுவதற்கும் முழு சுதந்திரம் இருக்கிறது. தங்கையை (காளியம்மாள்) நான்தான் அழைத்து வந்தேன். அவருக்கு எல்லா சுதந்திரமும் இருக்கிறது. பக்கத்தில் நிற்பவர் கூட நாளைக்கு வேறு ஓர் அமைப்புக்கு போகலாம். வரும்போது 'வாங்க வாங்க, வணக்கம்' என்போம். போகும்போது 'போங்க, ரொம்ப நன்றி. வாழ்த்துகள்' என்று சொல்வோம். இது எங்களுடைய கொள்கை.

பருவ காலத்தில் இலையுதிர் காலம் என்று இருக்கிறது. எங்கள் கட்சிக்கு இது களையுதிர் காலம். காளியம்மாளுக்கு முழு சுதந்திரம் இருக்கிறது. கட்சியிலேயே இருப்பதா அல்லது கட்சியை விட்டு வேறு இடத்தில் சென்று இயங்குவதா என்று முடிவு எடுக்கும் உரிமை அவருக்கு இருக்கிறது" என்று சீமான் தெரிவித்துள்ளார்.


## "ரூ.10,000 கோடி கொடுத்தாலும் தேசிய கல்விக் கொள்கையை ஏற்க மாட்டோம்" முதல்வர் ஸ்டாலின் ஆவேசம்

கடலூர், பிப்.23

"தேசிய கல்விக் கொள்கையை ஏற்று, அந்தத் திட்டத்தில் கையெழுத்துப் போட்டால்தான், 2,000 கோடி ரூபாய் கிடைக்கும். 10,000 கோடி ரூபாய் பணம் கிடைக்கும் என்று சொன்னாலும், நாங்கள் கையெழுத்துப்போடமாட்டோம். 2,000 ஆண்டுக்கு பின்னோக்கி நம்முடைய தமிழ்ச் சமூகம் செல்லக் கூடிய பாவத்தை நான் ஒருபோதும் செய்யமாட்டேன்" என்று முதல்வர் ஸ்டாலின் கூறியுள்ளார்.

கடலூரில் தமிழ்நாடு மாநிலப் பெற்றோர் ஆசிரியர் கழகத்தின் சார்பில் இன்று (பிப்.22) பெற்றோர்களைக் கொண்டாடுவோம் நிகழ்ச்சி நடைபெற்றது. இந்த விழாவில் தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் கலந்துகொண்டு பேசியது: "தேசிய கல்விக் கொள்கையை ஏற்று, அந்தத் திட்டத்தில் கையெழுத்துப் போட்டால்தான், 2,000 கோடி ரூபாய் கிடைக்கும். 10,000 கோடி ரூபாய் பணம் கிடைக்கும் என்று சொன்னாலும், நாங்கள் கையெழுத்துப்போடமாட்டோம்.

இந்தப்பணத்துக்காக நாங்கள் இன்று கையெழுத்து போட்டால், என்ன ஆகும்? 2,000 ஆண்டுக்கு



பின்னோக்கி நம்முடைய தமிழ்ச் சமூகம் சென்றுவிடும். அந்தப் பாவத்தை நான் ஒருபோதும் செய்யமாட்டேன். பெற்றோர்களே, உங்கள் குழந்தைகளின் திறமை வளர வேண்டுமா? அல்லது மூன்றாவது மொழி திணிக்கப்பட்டு ஒவ்வொரு வகுப்பிலும் படிப்பு தடைபட வேண்டுமா? பெற்றோர்கள் தங்களது குழந்தைகளின் திறமை வளர வேண்டும் என்றுதானே நினைப்பார்கள்.

இன்னும் தெளிவாகக் கூறுகிறேன். நாம் எந்த மொழிக்கும் எதிரி அல்ல. இந்தி மொழியும் நமக்கு எதிரி அல்ல. அதைப் படிக்க யார் விரும்புகிறார்களோ, அவர்கள் இந்தி பிரச்சார சபாவுக்குச் சென்றோ, கே.வி. பள்ளிகளிலோ அல்லது வேறு வழியிலோ படிப்பதை தமிழ்நாடு ஒருபோதும் தடுத்ததும் இல்லை, தடுக்கப்போவதும் இல்லை. ஆனால், இந்தியை எங்கள் மீது திணிக்க நினைக்காதீர்கள். திணிக்க நினைத்தால், தமிழர் என்றொரு இனமுண்டும், தனியே அவர்க்கொரு குணமுண்டும் என்பதை தமிழ்நாடு காட்டிவிடும்.

இருமொழிக் கொள்கையால், தமிழக மாணவர்களின் திறமை எந்தளவுக்கு வளர்ந்திருக்கிறது என்பதை உலகம் முழுவதும் வாழக் கூடிய தமிழர்கள் நிரூபித்துக் கொண்டிருக்கிறார்கள். அனைத்து மாநிலங்களும் மும்மொழிக் கொள்கையையும், தேசியக் கல்விக் கொள்கையையும் ஏற்றுக்கொண்ட நிலையில் தமிழகம் மட்டும் ஏன் ஏற்றுக்கொள்ளவில்லை என்று மத்திய கல்வி அமைச்சர் கேட்கிறார்.

அவருக்கு நான் கூறிக் கொள்கிறேன்... இது தமிழ்நாடு. தமிழை தாய்மொழியாக கொண்ட பெருமைக்குரியவர்கள் தமிழர்கள். எங்கள் உயிரைவிட மேலாக தமிழை மதிப்பவர்கள் நாங்கள். எங்கள் மொழியை அழிக்க எந்த ஆதிக்க மொழியை இணைத்தாலும் அதை நாங்கள் அனுமதிக்கமாட்டோம்.

இந்தியாவின் குடியரசுத் துணைத் தலைவர் ஒரு கருத்தை கூறியிருக்கிறார். ஒரு நிலத்தைக் கைப்பற்றுவதற்கு அதன் கலாசாரத்தைப் பின்னுக்குத் தள்ளி, மொழியை அழிப்பதே சிறந்த வழி என்று சொல்லியிருக்கிறார். அவர் பழைய வரலாற்றை கூறியிருந்தாலும், அது தமிழகத்தின் புதிய வரலாறாக, கொடிய வரலாறாக மாறிவிடக் கூடாது என்பதற்காகத்தான் போராடுகிறோம்" என்று முதல்வர் ஸ்டாலின் பேசினார்.

## "இந்தி மொழியை வைத்து அரசியல் செய்கிறது பாஜக" துரை வைகோ எம்.பி விமர்சனம்

மதுரை, பிப்.23

"இந்தி மொழியை வைத்து பாஜக அரசியல் செய்கிறது" என்று மதிமுக முதன்மைச் செயலாளர் துரை வைகோ எம்.பி கூறியுள்ளார்.

மதுரை தவிட்டு சந்தையில் உள்ள மதிமுக நிர்வாகியின் திருமண வரவேற்பு நிகழ்ச்சியில் மதிமுக முதன்மைச் செயலாளரும், எம்.பி.யுமான துரை வைகோ பங்கேற்றார். பின்னர் அவர் செய்தியாளர்களை சந்தித்து பேசினார். அப்போது அவர் கூறியது: "பாஜக மாநில தலைவர் அண்ணாமலைக்கும், துணை முதல்வர் உதயநிதிக்கும் தனிப்பட்ட காழ்ப்புணர்ச்சியால் ஏற்பட்ட பிரச்சினை அல்ல. தமிழகத்துக்கு தேவை இருமொழிக் கொள்கையா, மும்மொழிக் கொள்கையா என்பதுதான் பிரச்சினை.

அண்ணாமலை தமிழகத்தில் மும்மொழிக் கொள்கையை அமல்படுத்த வேண்டும் என்கிறார். பாஜகவை தவிர அனைத்து இயக்கங்களும் தமிழகத்துக்கு இரு மொழிக் கொள்கைதான் தேவை என்கின்றனர். இருமொழிக் கொள்கையால் ஆங்கிலம்



கற்றதால்தான் தமிழக மாணவர்கள் மருத்துவம் உள்ளிட்ட பல்வேறு துறைகளில் சிறந்து விளங்குகின்றனர். ஆனால் உத்தரப் பிரதேசம், மத்தியப் பிரதேசம், பிஹார் மாநிலங்களில் பாஜக தலைவர்கள் ஆங்கிலம் தேவையில்லை என்றும், நாட்டில் ஆங்கிலமே இருக்கக் கூடாது என்கின்றனர்.

மூன்றாவது மொழியாக இந்தியை மட்டுமே கற்க வேண்டும் என ஏன் திணிக்கிறார்கள். மொழியை வைத்து அரசியல் செய்வது பாஜக மட்டுமே. இந்தியை திணிப்பதால் எதிர்க்கிறோம்.

இந்தியாவில் அதிகமாக பாலியல் வன்கொடுமை நடக்கும் மாநிலம் உத்தரப் பிரதேசம், டெல்லி. தமிழகத்தில் பாலியல் வன்கொடுமை விகிதம் குறைவாக உள்ளது. அதை தடுக்க கடும் நடவடிக்கை எடுக்கப்படுகிறது. மதவாத அரசியலால் நாட்டுக்கு அச்சுறுத்தல் உள்ளது. பாஜகவை எதிர்க்கும் வல்லமை திமுகவுக்கு உள்ளதால் திமுக கூட்டணியில் இருக்கிறோம். அமெரிக்கா நூற்றுக்கணக்கான இந்தியர்களை கைவிலங்கிட்டு திருப்பி அனுப்பியது. அதில் அதிகமானவர்கள் வட இந்தியர்கள், இதில் யாரும் தமிழர்கள் இல்லை," என்று அவர் கூறினார். இந்த சந்திப்பின்போது பூமிநாதன் எம்.எல்.ஏ. உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

## 'ஊழல் கூடாரத்தில் டப்பிங் பணி...' மநீம தலைவர் கமல்ஹாசன் மீது தவெக விமர்சனம்

சென்னை, பிப்.23

"தொலைக்காட்சிப் பெட்டியை உடைத்து வீரவசனம் பேசியவர், ஊழல் கூடாரத்தில் இளைப்பாறிக் கொண்டு டப்பிங் பணி செய்கிறார்," என மநீம தலைவர் கமல்ஹாசனை தவெக மறைமுகமாகவும் கடுமையாகவும் விமர்சனம் செய்துள்ளது.

இது தொடர்பாக தமிழக வெற்றிக் கழக மாநில இணைச் செய்தித் தொடர்பாளர் எஸ்.ரமேஷ் வெளியிட்டுள்ள அறிக்கையில், "இவ்வளவு நாளாக ஒருவர் பேசியது தான் மக்களுக்கு புரியவில்லை என்றால், இப்போது அவர் யார், எதற்காக வந்தார் என்பது அவருக்கே புரியாமல் பேசி வருகிறார். அவர் யாரென்று நேரடியாக சொல்ல வேண்டிய அவசியமில்லை. சொல்லாமலே மக்களுக்கு புரியும்.

ரசிகர்களும், மக்களும் வாக்காளர்களாக மாறுவது அந்த நடிகரின் மக்கள்



செல்வாக்கு, தலைசிறந்த கொள்கைகள், தமிழகம் சார்ந்த அரசியல் முன்னெடுப்பு, மக்கள் நலன் சார்ந்த பணிகள் ஆகியவற்றை சார்ந்தது. ரசிகர்கள் வேறு வாக்காளர்கள் வேறு என்று திடீரென போதி மரம் அடியில் அமர்ந்து ஞானம் பெற்றது போல் அறிவாலயத்தில் கலந்து கரைந்த பின் பேசி வருகிறார்கள். எம்ஜிஆர் ரசிகர்கள் வேறு, சிவாஜி ரசிகர்கள் வேறு, ரஜினி ரசிகர்கள் வேறு, மற்ற ரசிகர்கள் வேறு, எங்கள் தலைவர் விஜய் ரசிகர்கள் வேறு.

எம்ஜிஆரின் அரசியல் வெற்றியை சிவாஜி பெற முடியவில்லை. எம்ஜிஆர் தனது ரசிகர்களை அரசியல்மயப்படுத்தி வாக்காளர்களாக்கியது போல எங்கள் தலைவர் கோடிக்கணக்கான ரசிகர்களை மட்டுமல்ல ஒட்டுமொத்த தமிழக மக்களையும் எப்படி வாக்காளர்களாக மாற்றுகிறார் என்பதை பாருங்கள். ஒருவரது செயல்பாடுகள் தான் வெற்றியையும் தோல்வியையும் நிர்ணயம் செய்யும். எந்த ஊழல் கூடாரத்துக்கு எதிராக தொலைக்காட்சி பெட்டியை எல்லாம் உடைத்து வீர வசனம் பேசி வந்தார்களோ, இன்று அதே ஊழல் கூடாரத்தில் சுயநலனுக்காக இளைப்பாறிக் கொண்டு அவர்களுக்காக டப்பிங் பணிகள் செய்து வருகிறார்கள்.

மக்களுக்காக மக்களை நம்பி உழைத்தால் என்றுமே மக்கள் ஆதரிப்பார்கள். பணி ஓய்வு காலத்தில் அரசியலுக்கு வந்துவிட்டு 'பிக்பாஸ்' பணிகளை செய்து வந்தால் இந்த நிலைமை தான் ஏற்படும் என்பதை உணர வேண்டும். இனியாவது ஆளும் 'பிக்பாஸ்'களுக்காக உழைக்காமல் மக்களுக்கு உண்மையாக உழையுங்கள். பொது நலத்துடன் உழையுங்கள்," என்று அதில் கூறப்பட்டுள்ளது.

## "மும்மொழிக் கொள்கையின் எந்த இடத்திலும் இந்தி கட்டாயம் என கூறவில்லை" எல்.முருகன் விவரிப்பு

நாமக்கல், பிப்.23

"மும்மொழிக் கொள்கையின் எந்த இடத்திலும் இந்தி கட்டாயம் என சொல்லவில்லை" என்று மத்திய தகவல் ஒலிபரப்புத் துறை இணையமைச்சர் எல்.முருகன் கூறியுள்ளார்.

நாமக்கல்லில் நடைபெற்ற பல்வேறு நிகழ்ச்சிகளில் மத்திய இணையமைச்சர் எல்.முருகன் கலந்து கொண்டார். அப்போது செய்தியாளர்களிடம் அவர் கூறியது: "இந்தியா 100வது சுதந்திர தினம் கொண்டாடும் சமயத்தில் இந்தியா வல்லரசு நாடாக இருக்க வேண்டும் என்பதற்கு அடித்தளமாக இருக்கும் வகையில் மத்திய அரசின் நிதிநிலை அறிக்கை அமைந்துள்ளது. அனைத்து தரப்பு மக்களையும் முன்னேற்றுவதற்கான பட்ஜெட்டாக அமைந்துள்ளது.

காங்கிரஸ் மத்தியில் இருந்த சமயத்தில் ரூ.800 கோடி மட்டும் ரயில்வே துறைக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டது. ஆனால், பாஜக தலைமையிலான மத்திய அரசு ரூ.6,500 கோடியை ரயில்வே துறைக்கு ஒதுக்கீடு செய்துள்ளது. கடந்த 10 ஆண்டுகளில் மத்திய அரசு, தமிழகத்துக்கு ரூ.11 லட்சம் கோடி நிதி ஒதுக்கீடு செய்துள்ளது. தமிழுக்கும், தமிழ் பண்பாட்டுக்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டு வருகிறது. தமிழ்தான் தொன்மையான மொழி என வெளிநாடுகளுக்கு



பிரதமர் மோடி செல்லும் சமயங்களில் வலியுறுத்துகிறார்.

அரசியல் காரணங்களுக்காக ரூ.5 ஆயிரம் கோடி தமிழகத்துக்கு வராமல் உள்ளது. ஒவ்வொரு நிதிக்கும் ஒரு விதிமுறை உள்ளது. அந்த விதிமுறையை ஏற்றால்தான் நிதி கிடைக்கும். எனவே, மக்களை திசை திருப்பாமல், மாணவர்களின் கல்வியில் விளையாடாமல், அரசியல் செய்யாமல் 3வதாக, ஒரு மொழியைத்தான் கொண்டுவர சொல்கிறார்கள். இந்திய மொழிகளில் ஒன்றைத்தான் 3வது மொழியாக கொண்டு வரச் சொல்கின்றனர். அது இந்தி மொழிதான் என்று எங்கேயும் குறிப்பிடவில்லை. ஒரு குழந்தை எந்த மொழி, எத்தனை மொழி படிக்க வேண்டும் என்பது குழந்தையின் உரிமை. இதை எதிர்ப்பதற்கு முதல்வருக்கு என்ன அதிகாரம் உள்ளது. எனவே, இந்த பாகுபாட்டை நிறுத்திக் கொள்ள வேண்டும்" என்றார்.

முன்னதாக எல்.முருகன் நாமக்கல் ஆஞ்சநேயர் கோயிலில் வழிபாடு நடத்தினார். பாஜக மாநில துணைத் தலைவர் கே.பி.ராமலிங்கம், பாஜக மாவட்ட தலைவர்கள் சரவணன், ராஜேஸ்குமார், முன்னாள் மாவட்ட தலைவர்கள் சத்தியமூர்த்தி, மனோகரன் உள்ளிட்டோர் உடனிருந்தனர்.

இதனிடையே, "தேசிய கல்விக் கொள்கையை ஏற்று, அந்தத் திட்டத்தில் கையெழுத்துப் போட்டால்தான், 2,000 கோடி ரூபாய் கிடைக்கும். 10,000 கோடி ரூபாய் பணம் கிடைக்கும் என்று சொன்னாலும், நாங்கள் கையெழுத்துப்போடமாட்டோம். 2,000 ஆண்டுக்கு பின்னோக்கி நம்முடைய தமிழ்ச் சமூகம் செல்லக் கூடிய பாவத்தை நான் ஒருபோதும் செய்யமாட்டேன்" என்று முதல்வர் ஸ்டாலின் கூறியுள்ளார்.

## ராக்கெட் ஏவுதளத்துக்கு நிலம் எடுக்க எதிர்ப்பு உடன்குடியில் கிராம மக்கள் உண்ணாவிரதப் போராட்டம்

தூத்துக்குடி, பிப்.23

குலசேகரன்பட்டினத்தில் அமையவுள்ள ராக்கெட் ஏவுதளம், விண்வெளித் தொழில் நிறுவனத்துக்கு உடன்குடி ஊராட்சி ஒன்றிய பகுதிகளில் நிலம் எடுப்பதற்கு எதிர்ப்பு தெரிவித்து உடன்குடியில் கிராம மக்கள், வியாபாரிகள் மற்றும் அரசியல் கட்சியினர் சார்பில் உண்ணாவிரதப் போராட்டம் நடந்தது.

தூத்துக்குடி மாவட்டம் குலசேகரன்பட்டினம் அருகே கூடல் நகர், அமராபுரம் ஆகிய கிராமங்களை உள்ளடக்கிய பகுதியில் சிறிய ரக ராக்கெட் ஏவுதளம் அமைப்பதற்கு சுமார் 2,233 ஏக்கர் நிலம் கையகப்படுத்தப்பட்டு கட்டுமானப் பணிகள் நடந்து வருகின்றன. இதில் நிலம், வீடுகளை இழந்தவர்களுக்கு வீடுகள், நிலம் வழங்கப்பட்டுள்ளன. மேலும் தமிழக அரசின் தொழில் முதலீடு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகக் துறை சார்பில்



விண்வெளித் தொழில் நிறுவனம் அமைப்பதற்கு ஆதியாக்குறிச்சி ஊராட்சி மற்றும் அதன் சுற்று வட்டார பகுதிகளில் சுமார் 1,000 ஏக்கர் நிலம் கையகப்படுத்தற்கான அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது.

இதனால் தங்கள் வாழ்வாதாரம், நிலம் பாதிக்கப்படும் எனக் கூறிய ஆதியாக்குறிச்சி கிராம விவசாயிகள் கடந்த 4ம் தேதி உடன்குடியில் தடையை மீறி உண்ணாவிரதப் போராட்டம் நடத்த திரண்டனர். இதில் பங்கேற்ற 203 விவசாயிகளை போலீஸார் கைது செய்தனர். தொடர்ந்து, அடுத்தக்கட்ட போராட்டங்கள் குறித்து கடந்த சில நாட்களுக்கு முன்பு உடன்குடியில் ஆலோசனை கூட்டம் நடந்தது.

அந்தக் கூட்டத்தில், நிலம் எடுப்பதற்கு எதிர்ப்பு தெரிவித்து பல கட்ட போராட்டங்களை அமைதி வழியில் நடத்த வேண்டும். வீடுகள் தோறும் கருப்புக் கொடி கட்டுவது, திண்ணைப் பிரச்சாரம் செய்வது, நிலம் எடுப்பால் பாதிக்கப்படாத மக்களையும் போராட்டத்தில் ஈடுபட வைப்பது என முடிவெடுக்கப்பட்டது.

இந்நிலையில், இன்று ஆதியாக்குறிச்சியில் விண்வெளி பூங்காவுக்கு நிலம் கையகப்படுத்த எதிர்ப்பு தெரிவித்து உடன்குடி பஜாரில் வியாபாரிகள், கிராம மக்கள் மற்றும் அரசியல் கட்சியினர் சார்பில் உண்ணாவிரதப் போராட்டம் நடந்தது. போராட்டத்தில், பச்சை தமிழகம் கட்சி தலைவர் சுப.உதயகுமார், இந்து முன்னணி மாநில துணைத் தலைவர் வி.பி.ஜெயக்குமார், தூத்துக்குடி தெற்கு மாவட்ட வணிகர் சங்க பேரவை தலைவர் ரவி, திமுக பேரூராட்சி மன்ற உறுப்பினர் சரஸ்வதி பங்காளன், அதிமுக ஒன்றிய செயலாளர் தாமோதரன், ஊராட்சி ஒன்றியக்குழு முன்னாள் உறுப்பினர் முருங்கை மகாராஜன் மற்றும் கிராம மக்கள், அனைத்து கட்சியினர் கலந்து கொண்டனர்.



சென்னையில் இருந்து நேற்று தஞ்சாவூருக்கு சென்ற உழவன் ரயிலின் முதல் வகுப்பு பெட்டியில் பயணி ஒருவர் தவறவிட்ட பையில் இருந்த 13 சவரன் நகையை திருடிய மகேந்திரன்(ரயில்வே தனியார் ஊழியர்) என்பவரை இருப்புப்பாதை காவல்துறையினர் கைது செய்து திருடப்பட்ட நகைகளை மீட்டனர். ரயில்வே துறையில் தனியாரிடம் ஒப்படைத்ததன் விளைவுதான் என்று ரயில்வே ஊழியர்கள் வேதனையடைந்துள்ளனர்



திண்டுக்கல் மாவட்டம் பழனியில் தைப்பூச திருவிழாவையொட்டி முருகனை திருமணம் செய்த வள்ளிக்கு தாய் வீட்டு சீதனம் கொண்டு செல்லும் நிகழ்ச்சி நடைபெற்றது..



தென்காசி மாவட்டம் புளியங்குடி மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகக் கல்லூரியில் இறுதியாண்டு மாணக்கர்களுக்கான கேம்பஸ் இன்டர்வியூ கல்லூரி முதல்வர் முனைவர் கண்ணன் தலைமையில் நடைபெற்றது முன்னனி நிறுவனங்களான சாம்சங் மற்றும் பாக்ஸ்கான் மனிதவள மேம்பாட்டுத்துறை அதிகாரிகள் கலந்து கொண்டு நேர்காணல் நடத்தியதில் இறுதியாண்டு பயிலும் 200 க்கும் மேற்பட்ட மாணவ, மாணவியர்கள் கலந்து கொண்டு வேலைவாய்ப்பை பெற்றனர். இந்நேர்காணலை கல்லூரி பேராசிரியர்கள் மற்றும் அலுவலக ஊழியர்கள் சிறப்பாக ஏற்பாடு செய்திருந்தினர்.



ராமநாதபுரம் மாவட்டம் பரமக்குடியில் ஐந்து முனை பகுதியில் இருந்து ஓட்டப்பலம் ரவுண்டான வரை நெடுஞ்சாலையில் மீண்டும் கடைகள் ஆக்கிரமிப்பு செய்யப்பட்டுள்ளன. சமீபத்தில் நடைபெற்ற ஆக்கிரமிப்பு அகற்றம் பெயரளவில் நடைபெற்றுள்ளதாக பொதுமக்கள் மற்றும் சமூக ஆர்வலர்கள் குற்றச்சாட்டு வைக்கின்றனர்.




இரயில் வண்டியில் டிக்கெட் இன்றி பயணிப்பவர்களை கண்டறிய மதுரை கோட்ட ரயில்வே துறை சார்பில், சிறப்பு தணிக்கை குழு ஏற்படுத்தப்பட்டுள்ளது அதன்படி சிவகங்கை மாவட்டம் மானாமதுரை சந்திப்பு நிலையத்தில் மற்றும் ராமேஸ்வரம்மதுரை சென்ற பயணிகள் வண்டியில் ரயில்வே பயணச்சீட்டு எடுக்காமல் சென்ற நபர்களிடம் மதுரை கோட்டம் டிக்கெட் பரிசோதர்கள் அதிரடி சோதனை மேற்கொண்டனர் இதில் டிக்கெட் எடுக்காமல் பயணம் செய்த பலரிடம் அபராதம் விதித்தனர்.

# குவாரி குத்தகை உரிமம் கோரும் விண்ணப்பங்களை இணையதள வழியாக விண்ணப்பிக்கலாம்! திருப்பூர் ஆட்சியர்

திருப்பூர் பிப்23

திருப்பூர் மாவட்டத்தில் தமிழ்நாடு சிறுகனிம சலுகை விதிகள் 1959 ன்படி சாதாரண கற்கள், மண், கிராவல் மற்றும் கிராணைட் போன்ற சிறுவகை கனிமங்கள் மற்றும் 31 வகையான சிறுகனிமங்களுக்கான குவாரி குத்தகை உரிமம் கோரும் விண்ணப்பங்கள் மற்றும் செங்கல் சூளை பதிவு சான்று பெறுவதற்கான விண்ணப்பங்களை 24.02.2025 முதல் மின்னனு முறையில் இணையதள வாயிலாக மட்டுமே பெறப்படும் என தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

மேற்கண்டவாறு சிறுகனிமங்களுக்கான குவாரி குத்தகை உரிமம் கோருவோர் www.mimas.tn.gov.in என்ற இணையதளத்தில் பதிவுசெய்து விண்ணப்பிக்குமாறு மாவட்ட ஆட்சியர் தா.கிறிஸ்துராஜ் தெரிவித்துள்ளார்..






நீலகிரி மாவட்டம் 2020 2021 ஆண்டிற்கான மத்திய உளவுத்துறை அமைச்சரின் பதக்கமான ஆதி உத்கிரிஸ்ட் சேவா பதக்கம் வென்ற சிறந்த காவல் அதிகாரிகளுக்கு நீலகிரி மாவட்ட காவல் கண்காணிப்பாளர். என். எஸ் நிஷா பதக்கங்களை வழங்கி வாழ்த்துக்கள் தெரிவித்தார்.



ராமநாதபுரம் மாவட்டம் பார்த்திபனூர் காவல் நிலையத்தில் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் சந்தீஷ். ஆய்வினை மேற்கொண்டு, காவல் நிலையத்தின் முக்கிய கோப்புகள் மற்றும் ஆயுத வைப்பறை ஆகியவற்றைப் பார்வையிட்டார் மேலும் காவல் நிலையத்தில் பணிபுரியும் காவலர்களிடம் பொதுமக்களிடம் பணிவுடன் நடந்து கொள்ள வேண்டும் எனவும், பணியின் போது காவல்துறையினர் கடைப்பிடிக்க வேண்டிய வழிமுறைகள் குறித்தும் அறிவுரைகள் வழங்கினார்..



செங்கல்பட்டு பழைய மகாபலிபுரம் சாலையில் உள்ள தாழம்பூர் ஏரி EXNORA சார்பாக சுத்தம் செய்யப்பட்டது நிகழ்ச்சியில் தாழம்பூர் பஞ்சாயத்து தலைவர் முனிசாமி, தாழம்பூர் காவல் ஆய்வாளர் சார்லஸ், மடிப்பாக்கம் சுப்பிரமணியம், தாம்பரம் பொறுப்பாளர் சீதாராமன், ஓஎம்ஆர் நீர் நிலை பாதுகாப்பு பொறுப்பாளர் கற்பகம், தாழம்பூர் ஏரி பொறுப்பாளர் ஸ்ரீதேவி, மற்றும் பஞ்சாயத்து ஊழியர்கள் பொதுமக்கள் கலந்து கொண்டு சுத்தம் செய்தார்கள் விரைவில் எக்ஸ்னோரா இந்த ஏரியை முழுவதும் சுத்தம் செய்ய பஞ்சாயத்து தலைவர் கேட்டுக்கொண்டார் நிகழ்ச்சி முடிவுற்றதும் அனைவருக்கும் காலை உணவு வழங்கப்பட்டது.




தமிழ்நாடு முதலமைச்சர் மு க ஸ்டாலின் நேற்று காணொளிக்காட்சியின் மூலம் இராமநாதபுரம் மாவட்டம், மண்டபம் ஊராட்சி ஒன்றியம், புதுமடம் அரசு மேல்நிலைப்பள்ளியில் கூடுதல் வகுப்பறை கட்டடம் திறந்து வைத்ததையொட்டி மாவட்ட ஆட்சியர் சிம்ரன்ஜீத் சிங் காலோன பள்ளி மாணவ, மாணவிகளுடன் குத்துவிளக்கேற்றி வைத்து பார்வையிட்டார் இந்நிகழ்ச்சியில் இராமநாதபுரம் சட்டமன்ற உறுப்பினர் காதர்பாட்சா முத்துராமலிங்கம் பங்கேற்றார்.

# மத்திய உள்துறை சார்பில் திண்டுக்கல் மாவட்டத்தில் 3 போலீஸ் அதிகாரிகளுக்கு பதக்கம்



திண்டுக்கல், பிப்.23

தமிழகத்தில் 2020 ஆம் ஆண்டு சிறப்பாக பணியாற்றிய போலீஸ் அதிகாரிகளுக்கு மத்திய உள்துறை யின் சார்பில் பதக்கங்கள் அறிவிக்கப்பட்டது இந்த பதக்கங்களுக்கு திண்டுக்கல் மாவட்ட குற்றப்பிரிவு போலீஸ் துணை சூப்பிரண்டு கண்ணன், இன்ஸ்பெக்டர் முத்துலட்சுமி, தேனி தனிப்பிரிவு முன்னாள் காவல் ஆய்வாளர் தெய்வேந்திரன் ஆகியோர் தேர்ந்தெடுக்கப்பட்டனர் 3 பேருக்கும் திண்டுக்கல் மாவட்ட போலீஸ் சூப்பிரண்டு பிரதீப் பதக்கங்களை வழங்கினார்.



முல்லைப் பெரியாறு அணையில் கேரள அரசு சார்பில் புதிய படகை நீர்ப்பாசன துறை அமைச்சர் இயற்கை வைத்தார். முல்லை பெரியாறு அணையில் கேரள அரசு சார்பில் அணையை ஆய்வு செய்வதற்காக புரிய படகு ரூபாய் 12 லட்சம் மதிப்பில் வாங்கப்பட்டது அந்த படகை கேரள மாநில நீர்ப்பாசனத்துறை அமைச்சர் ரோஸி அகஸ்டின் கொடிய அசைத்து தொடங்கிவைத்தார். நிகழ்ச்சியில் பீர்மேடு எம்எல்ஏ வாழூர் சோமன், குமளி பஞ் சாயத்து தலைவர் டெய்சி செபஸ்தியான், மாவட்ட பஞ் சாயத்து தலைவர் அரிச்சன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்

# கொடைக்கானல் பேருந்து நிலைய பணிமனை வளாகத்தில் சண்டைபோட்ட காட்டெருமைகள்! வனப்பகுதிக்குள் விரட்ட மக்கள் கோரிக்கை

கொடைக்கானல், பிப்.23

திண்டுக்கல் மாவட்டம் கொடைக்கானல் மலைப்பகுதியில் கடந்த சில மாதங்களாக வனப்பகுதியை விட்டு வெளியேறும் காட்டெருமைகள் கூட்டம் நகர்ப்பகுதிகளில் உலா வருவதும், குடியிருப்பு பகுதிகளில் முகாமிடுவதும் வாடிக்கையாக உள்ளது, இந்நிலையில் இன்று இரவு வேளையில் பேருந்து நிலைய வளாகத்திற்குள் உலா வந்த காட்டெருமைகள் கூட்டம் பேருந்து பணிமனைக்குள் சென்றது, இதனிடையே இந்த கூட்டத்தில் இருந்த இரண்டு காட்டெருமைகள் ஒன்றோடு ஒன்றாக சண்டையிட்டு இரும்பு கதவின் மீது மோதியது, இதன் காரணமாக பணிமனை வளாக இரும்பு கதவு முறிந்தது, தகவல் அறிந்து வந்த வனத்துறையினர் காட்டெருமைகளை



அப்பகுதியில் இருந்து அருகில் உள்ள வனப்பகுதிக்கு விரட்டி சென்றனர், இதனை வனத்துறையினர் கவனம் செலுத்தி பேருந்து நிலைய வளாகத்திற்குள் உலா வரும் காட்டெருமைகளை தடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என பொதுமக்கள் வனத்துறையினறுக்கு வேண்டுகோள் விடுத்துள்ளனர்.



ஆலங்குளம் ஊராட்சி ஒன்றியத்தின் கீழ் தூய்மை பாரத இயக்கம் திட்டத்தில் மூலம் 2023 2024 18 கிராம ஊராட்சிகளுக்கு ரூபாய் 1 கோடியே 22 லட்சம் 50 ஆயிரம் மதிப்பீட்டில் மின்கல வாகனங்கள் ஆலங்குளம் யூனியன் தலைவர் திவ்யா மணிகண்டன் மற்றும் தென்காசி மாவட்ட ஆட்சியர் ஏ.கே. கமல் கிஷோர் இணைந்து வழங்கினர் இந்நிகழ்வில் அரசு ஒப்பந்த காரர் மணிகண்டன் மற்றும் 18 ஊராட்சி தலைவர்கள் அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# முதுகுளத்தூர் கிளைச்சிறை தொடர்ந்து இயங்க அரசு நடவடிக்கை எடுக்க எம்.பி தர்மர் வலியுறுத்தல்

முதுகுளத்தூர், பிப், 23

முதுகுளத்தூரில் உள்ள கிளை சிறைச்சாலை தொடர்ந்து இயங்கவும், புதிய கட்டிட வளாகம் கட்ட அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என எம்.பி தர்மர் வலியுறுத்தியுள்ளார்.

இது குறித்து மாநிலங்களவை எம்.பி தர்மர் செய்தியாளர்களிடம் அவர் கூறும்போது.

ராமநாதபுரம் மாவட்டம், முதுகுளத்தூரில் 1872 ஆம் ஆண்டு கிளை சிறை துவங்கப்பட்டது. ஆங்கிலேயர் காலம் தொட்டு 153 ஆண்டுகளாக கிளைச்சிறைச்சாலை இயங்கி வருகிறது. இதில் பல சுதந்திர போராட்ட தியாகிகள் சிறையில் அடைக்கப்பட்ட வரலாற்று சிறப்புமிக்கது. முதுகுளத்தூர் சட்டமன்ற தொகுதியில் உள்ள கடலாடி, கமுதி, முதுகுளத்தூர் ஆகிய 3 ஊர்களிலும் 3 தாலுகா என்ற அடிப்படையில் 3



நீதிமன்றங்கள் உள்ளது. இங்கு 1600க்கும் மேற்பட்ட வழக்குகள் நடந்து வருகிறது. இதனை போன்று திருச்சுழி, பரமக்குடி நீதிமன்றங்களில் 2000த்திற்கு மேற்பட்ட வழக்குகள் நடந்து வருகிறது.

இதனை போன்று கமுதி டி.எஸ்.பி கட்டுப்பாட்டின் கீழ் கமுதி, கோவிலாங்குளம், பெருநாழி, மண்டலமாணிக்கம், அபிராமம் உள்ளிட்ட காவல்நிலையங்களும். முதுகுளத்தூர் டி.எஸ்.பி கட்டுபாட்டின் கீழ் கீழத்தூவல், பேரையூர், முதுகுளத்தூர், தேரிருவேலி, இளஞ்செம்பூர், கடலாடி, கீழச்செல்வனூர் காவல்நிலையங்களும்.

கீழக்கரை டி.எஸ்.பி கட்டுபாட்டில் சாயல்குடி, ஏர்வாடி, சிக்கல் உள்ளிட்ட காவல்நிலையங்கள், திருச்சுழி, நரிக்குடி, பார்த்திபனூர், சத்திரக்குடி காவல் நிலையங்கள் மற்றும் கமுதி, முதுகுளத்தூர் அனைத்து மகளிர் காவல்நிலையங்கள், கமுதி மதுவிலக்கு காவல்நிலையம் என 25 காவல் நிலையங்கள், அதாவது மாவட்டத்திலேயே அதிகமான எண்ணிக்கையிலான காவல்நிலையங்களை உள்ளடக்கியதாக முதுகுளத்தூர் கிளை சிறைச்சாலை திகழ்கிறது.

இந்தநிலையில் தமிழ்நாட்டில் நிர்வாக காரணத்தினால் சிறைச்சாலைகள் குறைக்கும் திட்டத்தில் முதுகுளத்தூர் கிளை சிறைச்சாலை ஒன்று இருப்பது தெரியவருகிறது. இதனால் இப்பகுதியினர் பாதிக்கும் சூழ்நிலை உள்ளது. எனவே இத்திட்டத்தை தமிழக சிறைத்துறை கைவிட வேண்டும்.

மேலும் இந்தசிறைச்சாலை கட்டப்பட்டு பல ஆண்டுகள் கடந்தும் இன்று வரை ஓடு வேயப்பட்டதாக இருக்கிறது. இதனால் அடிப்படை வசதிகள், பாதுகாப்பு வசதிகள் போதுமானதாக இல்லை.

இந்தநிலையில் முதுகுளத்தூர் காவல்நிலையம் பகுதியில் வளாகத்துடன் கூடிய புதிய சிறைச்சாலை கட்டும் அளவிற்கு தேவையான அரசு காலியிடம் ஒரு ஏக்கருக்கு மேல் இருக்கிறது. எனவே அப்பகுதியில் புதிய சிறைச்சாலை அமைக்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றார்.

# தேனி சிங்கராஜபுரம் அரசு நடுநிலை பள்ளியில் ஆண்டு விழா நிகழ்ச்சி



தேனி, பிப்.23

தேனி மாவட்டம் சிங்கராஜபுரம் அரசு நடுநிலைப்பள்ளியில் பள்ளி ஆண்டு விழா கலை நிகழ்ச்சி வெகு சிறப்பாக நடைபெற்றது நிகழ்ச்சியில் மாணவ மாணவிகளின் பேச்சுப்போட்டி ஆங்கில உரைகள் வாசித்தல், மாறுவேட போட்டி, நாடகம், நடனங்கள் போன்ற கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றது விழாவில் சிறப்பு அழைப்பாளர்களாக மாவட்ட கல்வி அலுவலர் நாகலட்சுமி, வட்டார கல்வி அலுவலர் சரஸ்வதி, மற்றும் அருண்குமார் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினர் இவ்விழாவினை பொறுப்பு தலைமை ஆசிரியர் லட்சுமி, கணித பட்டதாரி ஆசிரியர் முத்து, அறிவியல் பட்டதாரி ஆசிரியர் லதா சாந்தி, இடைநிலை ஆசிரியர் கந்தவேல், மற்றும் முத்துலட்சுமி, ஜெயபிரபா, சரண்யா எஸ் எம் சி தலைவர்கள் மற்றும் உறுப்பினர்கள் கிராம பொதுமக்கள் மாணவ மாணவிகளின் பெற்றோர்கள் என அனைவரும் ஒன்றிணைந்து சிறப்பாக விழாவினை ஏற்பாடு செய்திருந்தனர் விழா முடிவில் மாணவமாணவிகளுக்கு சிறப்பு பரிசுகள் வழங்கப்பட்டது

# இந்திய யூனியன் முஸ்லிம் லீக் சார்பு அணிகளின் சார்பில் இந்திய அரசியலமைப்பு சட்ட பாதுகாப்பு கருத்தரங்கம்

தென்காசி பிப். 23

இந்திய யூனியன் முஸ்லிம் லீக் சார்பு அணிகளின் சார்பில் இந்திய அரசியலமைப்பு சட்ட பாதுகாப்பு கருத்தரங்கம் மற்றும் அணிகளின் பயிலரங்கம் தென்காசி வி டி எஸ் ஆர் மகாலில் முஸ்லிம் லீக் மாவட்ட தலைவர் எம் அப்துல் அஜீஸ் தலைமையில் நடந்தது.

மாவட்ட பொருளாளர் பி ஏ செய்யது மசூது வர்த்தக அணி மாநில தலைவர் எஸ் செய்யது சுலைமான் எஸ்டி யூ மாநில தலைவர் கானகத்தி மீரான் மாநில துணைத்தலைவர் எம் கே முகம்மது மைதீன் பிரவாசி லீக் மாநில பொதுச் செயலாளர் எஸ் கே எம் ஹபிபுல்லா விவசாய அணி மாநில செயலாளர் எம் முகமது அலி மாநில பொருளாளர் ஜப்பான் கே உதுமான் வழக்கறிஞர் அணி மாநில செயலாளர் ஜாகிர் அப்பாஸ் முஸ்லிம் யூத லீக் மாநில முதன்மை துணைத் தலைவர் எம் நயினார் முஹம்மது கடாபி மாநில மகளிர் அணி எஸ் சபுரா வேகம் மாவட்ட அமைப்புச் செயலாளர் கே எம் அப்துல் காதர் தென்காசி நகரத் தலைவர் என் எம் அபூபக்கர் தகவல் தொழில் நுட்ப அணி மாநில துணைத்தலைவர் கே ஜே அப்துல்லா ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

மாவட்ட மாணவர் பேரவை தலைவர் முஹம்மது முகைதீன் ரிபாய் ஆலிம் கிராஅத் ஓதினார் மாவட்ட வர்த்தக அணி தலைவர் அகமது மீரான் அனைவரையும் வரவேற்றார் யூத்லீக் மாவட்ட தலைவர் செய்யது அபுதாகிர்



நிகழ்ச்சியை தொகுத்து வழங்கினார். முஸ்லிம் லீக் மாவட்ட செயலாளர் செய்யது பட்டாணி அறிமுக உரையாற்றினார்.

மாநில செயலாளர் நெல்லை மஜித் முஸ்லீம் மாணவர் பேரவை தேசிய துணைத்தலைவர் புளியங்குடி அல் அமீன் ஆகியோர் துவக்க உரையாற்றினார்கள்.

மூத்த ஊடகவியலாளர் தி. செந்தில் வேல் முஸ்லிம் லீக் மாநில செயலாளர் ஆடுதுறை ஏ எம் ஷாஜகான் ஆகியோர் சிறப்புரையாற்றினார்கள்.

கருத்தரங்கில் முஸ்லிம் லீக் மாவட்ட நிர்வாகிகள் ஏ அப்துல் வகாப் தி மடத்துப்பட்டி ஊராட்சி மன்ற தலைவர் சையது இப்ராஹிம் கலீல் ரகுமான் எம் அப்துல் ரஹீம் தென்காசி முகமது முஸ்தபா சாகுல் ஹமீது கடையநல்லூர் என் எஸ் அக்பர் அலி எஸ் ஏ ஹைதர் அலி பி பி அயுப் கான் நகர நிர்வாகிகள் தென்காசி அப்துல் காதர் முகமது யூசுப் கடையநல்லூர் கே எம் செய்யது மசூது ஆசிரியர் ஏகே முஸ்தபா பேட்டை ஜபருல்லா புளியங்குடி இ.மை அப்துல் ரகுமான் எம் ஷேக் காதர் மைதீன் முகமது அப்துல் காதர் வாசுதேவநல்லூர் மிலிட்டரி சாகுல் ஹமீது ஆர் செய்யது ரஹ்மத்துல்லாஹ் அருளாட்சி கே ஜமீல் மாஸ்டர் கே அப்பாஸ் வடகரை முகமது மீரான் முகமது இலியாஸ் ரிசவு பக்கீர் செங்கோட்டை பசீர் அப்துல் கரீம் சாம்பவர் வடகரை ரசூல் பாம்பு கோயில் சந்தை செய்யது முகைதீன் பட்டாணி மேத்தர் மாவட்ட அணிகளின் நிர்வாகிகள் உலமாக்கள் அணி எம் எச் சம்சுதீன் ஆலிம்

எம் முகமது இப்ராஹிம் ஆலீம் புளியங்குடி ஜே கலீல் ரகுமான் ஆலிம் மாணவரணி தமீமுல் அஃலம் ஏ முகமது ஒலி இளைஞரணி செங்கோட்டை பி நிசார் அகமது புளியங்குடி அப்துல் காசிம் தொழிலாளர் அணி புளியங்குடி முகமது பிலால் பண்பொழி பீர் இஸ்மாயில் விவசாய அணி மேலப்பாவூர் எஸ் அப்துல் ரகுமான் அபுல் ஹசன் சாதலி எம். தாஜுதீன் வர்த்தக அணி கடையநல்லூர் கே. நயினார் முஹம்மது புளியங்குடி டெய்லர் காஜா முகைதீன் தகவல் தொழில்நுட்ப அணி கடையநல்லூர் த ம அப்துல் சமது எம் அப்துல் அஜீஸ் எம் செய்யது சுலைமான் பிரவாசி லீக் முகம்மது யூசுப் எம்.எ பக்கீர் மைதீன் ஏ.அப்துல்லா வழக்கறிஞர் அணி எம் முகமது சலீம் முகமது ஷேக் மூத்த பத்திரிக்கையாளர் புளியங்குடி சாகுல் ஹமீது நகரமன்ற உறுப்பினர்கள் புளியங்குடி முகமது நயினார் கடையநல்லூர் முஹம்மது முகைதீன் உட்பட ஏராளமான பேர் பங்கேற்றனர் முடிவில் எஸ்டியு மாவட்ட தலைவர் பொறியாளர் எஸ் முகமது இஸ்மாயில் நன்றி கூறினார்

# நாகர்கோவில் அருகே கட்டையன்விளை சந்திப்பில் புதிய பேருந்து நிறுத்தம் கட்டித்தர வலியுறுத்தல்

நாகர்கோவில், பிப்.23

கன்னியாகுமரி மாவட்டம் நாகர்கோவில், வெட்டூர்ணிமடம் அடுத்த கட்டையன்விளை சந்திப்பில் நீண்ட காலமாக இருந்த பேருந்து நிறுத்தத்தை மாநகராட்சி நிர்வாகத்தினர் இடித்து அகற்றி மீண்டும் புதிய பேருந்து நிறுத்தம் கட்டி தருவதாக தெரிவித்த நிலையில் இரண்டு மாதம் கடந்தும் இன்று வரை கட்டிக் கொடுத்ததால்



வெயிலிலும், மழையிலும் சிரமத்துடன் அங்கு பேருந்திற்காக காத்திருக்கம் பயணிகள்மக்களின் தேவையை நிறைவேற்றாமல், யாரை திருப்திப்படுத்த மக்கள் பிரதி நிதிகள் செயல்படுகின்றனர் என ஆதிதிராவிடர் முன்னேற்ற இயக்கத்தின் நிறுவனரும் சமூக ஆர்வலருமான ஜான்விக்டர்தாஸ் கேள்வி எழுப்பியுள்ளார்.

மாலை தந்தி



# லோயர்கேம்ப்பில் மாணவர்கள் சார்பில் வன பாதுகாப்பு விழிப்புணர்வு முகாம்






கம்பம், பிப் .23

தேனி மாவட்டம் லோயர்கேம்ப்பில் தமிழ்நாடு வனத்துறை, அகில இந்திய வன மேம்பாட்டு இயக்கம் மற்றும் ராயப்பன்பட்டி புனித அலோசியஸ் மேல்நிலைப்பள்ளி நாட்டு நலப்பணி திட்டம் சார்பில் நெகிழிப்பை அகற்றுதல் வன பாதுகாப்பு விழிப்புணர்வு முகாம் நடைபெற்றது

முகாமிற்கு வன நல்வாழ்வு சங்கம் சார்பில் ஜே. ஏ. சதீஷ்குமார் தலைமை வகித்தார். மாவட்ட தொடர்பு அலுவலர் நேருராஜன், வனச்சரகர் ஸ்டாலின் முன்னிலை வகித்தனர். வானவர் ரகுபதி முகாமை தொடங்கி வைத்தார். முகாமில் வனவர்கள் சக்தி வடிவில் வினோத் கமார் தர்ம சக்தி விழிப்புணர்வு பற்றி பேசினர். உடற்கல்வி ஆசிரியர்கள் ராஜ்குமார் செல்வராஜ் மாணவர்களுக்கு கருத்துக்களை வழங்கினர். முகாம ஏற்பாடுகளை நாட்டு நலப்பணி திட்ட அலுவலர்கள் எஸ் குமார் சுரேஷ் ஜஸ்டின் ஆகியோர் செய்தனர். மாணவர்கள் குமுளி லோயர் கேம்ப் வனப்பகுதியில் உள்ள நெகிழி பொருட்களை அகற்றினர்.

# பாளையங்கோட்டை அரசினர் சித்த மருத்துவ கல்லூரியில் இருபெரும் விழா

நெல்லை பிப் 23

பாளையங்கோட்டை அரசினர் சித்த மருத்துவ கல்லூரியில் இருபெரும் விழா உலக தாய்மொழி தின விழா மற்றும் பாரதியார் மொழி ஆய்வகம் திறப்பு விழா கல்லூரி பேராசிரியர் டாக்டர் மலர்விழி தலைமையில் நடைபெற்றது.



வந்திருந்த விருந்தினர்களை பேராசிரியர் கோமளவள்ளி துணை முதல்வர் வரவேற்றார்கள் மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழக பதிவாளர் பேராசிரியர் முனைவர் சாக்ரட்டீஸ் கலந்துகொண்டு பாரதியார் மொழி ஆய்வகத்தை திறந்து வைத்து விழா பெறுரை நிகழ்த்தினார் சிறப்பு தமிழ் விருந்தாக மூத்த தமிழறிஞர் பேராசிரியர் பா வளனரசு உலகின் மூத்த மொழி தமிழ் என்ற தலைப்பில் விரிவுரையாற்றினார் இந்நிகழ்ச்சியில் கல்லூரி உரைவிட மருத்துவ அலுவலர் டாக்டர் முத்துக்குமார் கல்லூரி மூத்த பேராசிரியர் டாக்டர் வேங்கடப்பன் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினார்கள் இந்நிகழ்ச்சியில் பேராசிரியர்கள் சுந்தர்ராஜன் சுஜாதா மருத்துவர்கள் சித்ரா உமா கல்யாணி அனுராதா இந்திரா ராஜகுமாரி நர்மதா மற்றும் பலர் கலந்து கொண்டனர் விழாவில் பொது மருத்துவத்துறை இணை பேராசிரியர் டாக்டர் ஜி சுபாஷ் சந்திரன் நிகழ்ச்சியினை தொகுத்து வழங்கினார்கள் இந்நிகழ்ச்சியில் பட்டப் படிப்பு பட்டப் மேற்படிப்பு மாணவர்கள் பயிற்சி மருத்துவர்கள் அனைவரும் கலந்து கொண்டனர் இந்நிகழ்ச்சியில் முத்தாய்ப்பாக மூத்த தமிழறிஞர் பேராசிரியர் தொ.பரமசிவன் அவர்களின் 250 நூல்கள் கல்லூரி நூலகத்திற்கு வழங்கப்பட்டது இந்நிகழ்ச்சியில் பேராசிரியர் தொ.பரமசிவன் குடும்பத்தினர் திருமதி விஜயலட்சுமி பொன்னாடை அணிவித்து கௌரவிக்கப்பட்டார் பாரதியார் மொழி ஆய்வகத்தில் தமிழ் மற்றும் ஆங்கில வழி ஆய்வகங்கள் இன்று முதல் இக்கல்லூரியில் செயல்பட தொடங்கியது. இந்நிகழ்ச்சியில் கலந்து கொண்டு சிறப்பித்த அனைவருக்கும் நன்றி தெரிவிக்கும் முகமாக பேராசிரியர் வேங்கடப்பன் நன்றி கூறினார்கள்

# கம்பம் நகராட்சி பெண்கள்பள்ளியில் புதிய கட்டிடம் காணொலி காட்சியில் திறந்து வைத்த முதல்வர்



கம்பம். பிப். 22:

தேனி மாவட்டம் கம்பம் முஹைதீன் ஆண்டவர் புரம் நகராட்சி பெண்கள் மேல்நிலைப் பள்ளியில், நபார்டு வங்கி நிதியுதவி மூலம் (202324 திட்டத்தின் கீழ்) ரூபாய் 128 இலட்சம் மதிப்பீட்டில் கட்டி முடிக்கப்பட்ட பள்ளி கட்டிடங்களை, தமிழ்நாடு முதலமைச்சர் மு.க ஸ்டாலின் காணொளி காட்சி மூலம் திறந்து வைத்து சிறப்பித்தார். இதைத் தொடர்ந்து, பள்ளி வளாகத்தில் நடைபெற்ற குத்து விளக்கு ஏற்றும்நிகழ்ச்சியில் கம்பம் நகர்மன்றத்தலைவர் வனிதா நெப்போலியன், நகராட்சி ஆணையாளர் உமாசங்கர், நகராட்சி உதவி பொறியாளர் சந்தோஷ் குமார், நகர் மன்ற உறுப்பினர்கள் சாதிக் அலி, சர்புதீன், சுந்தரி வீரபாண்டியன், சாபிரா பேகம், அமுதா, சகிதா பானு, அன்பு குமாரி மற்றும் பள்ளி தலைமை ஆசிரியர் ஆரோக்கியம்மாள், ஆசிரியைகள், பள்ளி மேலாண்மை குழு உறுப்பினர்கள், முன்னாள் மாணவர் சங்க நிர்வாகிகள், பெற்றோர்கள் மற்றும் மாணவிகள் கலந்துகொண்டு குத்துவிளக்கு ஏற்றி இனிப்பு வழங்கி மகிழ்ந்தனர்.



மதுரை மாவட்டம் ஆலத்தூர், பி.ஆர்.மகாலில் சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை, ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப்பணிகள் திட்டம் சார்பாக வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி தலைமையில் 'சமுதாய வளைகாப்பு விழா' நடைபெற்றது. இவ்விழாவில் மாவட்ட ஆட்சித் தலைவர் மா.சௌ. சங்கீதா, சோழவந்தான் சட்டமன்ற உறுப்பினர் வெங்கடேசன், மாநகராட்சி மண்டல தலைவர் வாசுகி சசிகுமார், மாவட்ட ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்ட அலுவலர் . ஷீலா சுந்தரி உட்பட பலர் கலந்து கொண்டனர்.

# வாடிப்பட்டி அலைபேசி பயன்பாட்டால் பெண்களுக்கு ஏற்படும் பிரச்சனைகள் குறித்த விழிப்புணர்வு கருத்தரங்கு

வாடிப்பட்டி, பிப்.23



மதுரை மாவட்டம் , கிரட் குடும்ப ஆலோசனை மையத்துடன் சமூகப் பணிகள பயிற்சி மாணவர்கள் இணைந்து அலைப்பேசியின் பயன்பாட்டால் ஏற்படும் பிரச்சினைகள் பற்றிய விழிப்புணர்வு கருத்தரங்கு நடந்தது. இந்த கருத்தரங்கிற்கு, கிரட் செயலாளர் வழக்கறிஞர் அழகேசன் தலைமை தாங்கினார்.

குடும்ப ஆலோசனை மைய ஆலோசகர் முனைவர் கன்மணி முன்னிலை வகித்தார்.

மதுரை சமூக அறிவியல் கல்லூரி மாணவி ஸ்வேதா வசித் வரவேற்றார். இந்த கருத்தரங்கில், மதுரை ஒருங்கிணைந்த சேவை மையம் அலுவலக நிர்வாகி டயானா பெண்களின் பாதுகாப்பு அவசர உதவி எண்கள் 181 , பெண்கள் உதவி எண்,1098 குழந்தைகள் உதவி எண் ஆகியவற்றை பயன்படுத்தும் முறை பற்றி விளக்கிப் பேசினார். சமயநல்லூர் அனைத்து மகளிர் காவல் நிலைய தலைமை காவலர்கள் சுதாசெல்வி, மாரீஸ்வரி , வாடிப்பட்டி காவல் நிலைய தலைமை எழுத்தர் நாகராஜன் ஆகியோர் அலைபேசி மற்றும் பெண்கள் பாதுகாப்பு குறித்தசட்டங்கள் பற்றியும், குடும்ப ஆலோசனை மையத்தின் ஆலோசகர் காசி விஸ்வநாதன் ஆகியோர் இன்றைய காலத்தில் அலைப்பேசியின் அளவில்லா பயன்பாடு மற்றும் அதன் விளைவாக பெண்கள் எதிர்கொள்ளும் பிரச்சனைகள், மனநல பாதிப்புகள், குடும்ப உறவுகளின் மாறுபட்ட நிலைமைகள் குறித்தம், மேலும், நடத்தை ஆலோசனையின் முக்கியத்துவம் மற்றும் இதை சமாளிக்க தேவையான வழிமுறைகள் பற்றியும் விளக்கி பேசினர். இந்த விழிப்புணர்வு கருத்தரங்கில் மகளிர் சுயஉதவி குழு உறுப்பினர்கள்கலந்து கொண்டனர். முடிவில், அமெரிக்கன் கல்லூரி சமூகவியல் மாணவர்கள சந்தோஷ் குருஜித் நன்றி கூறினர்.

# மீனாட்சி சவுத்ரி மற்றும் ஐஸ்வர்யா ராஜேஷ் நடித்துள்ள 'சங்கராந்திகி வஸ்துன்னம்' படத்தின் ஓ.டி.டி ரிலீஸ் குறித்த தகவல்..





தெலுங்கு நடிகர் வெங்கடேஷ், தற்போது நடித்துள்ள படம் 'சங்கராந்திகி வஸ்துன்னம்'. அனில் ரவிபுடி இயக்கி இருக்கும் இப்படத்தில் மீனாட்சி சவுத்ரி, ஐஸ்வர்யா ராஜேஷ், உபேந்திரா லிமாயி, சாய்குமார், நரேஷ், வி.டி.வி கணேஷ் மற்றும் ஸ்ரீனிவாஸ் அவசராலா ஆகியோர் முக்கிய கதாப்பாத்திரங்களில் நடித்துள்ளனர்.

தில் ராஜூ மற்றும் ஷிரிஷ் தயாரித்துள்ள இப்படத்திற்கு பீம்ஸ் சிசிரோலியோ இசையமைத்துள்ளார். கடந்த ஜனவரி 14ம் தேதி பொங்கல் விருந்தாக திரைக்கு வந்த நிலையில் வசூல் ரீதியாக சாதனை படைத்துள்ளது. உலகம் முழுவதும் பாக்ஸ் ஆபீஸில் ரூ.250 கோடிக்கும் அதிகமாக வசூல் செய்துள்ளது. திரையரங்குகளில் வரவேற்பை பெற்று வரும்

இப்படத்தின் டிஜிட்டல் மற்றும் சாட்டிலைட் உரிமைகளை ஜீ குழுமம் பெற்றுள்ளது.



திண்டுக்கல் மாவட்டம் ஒட்டன்சத்திரம் வட்டம் அத்திக் கோம்பை ஊராட்சி ஒன்றிய ஆரம்பப்பள்ளி பள்ளியில் ஆண்டுவிழா பள்ளி தலைமை ஆசிரியர் பிரான்ஸிஸ் தலைமையில் நடைபெற்றது. சிறப்பு விருந்தினராக திண்டுக்கல் மாவட்ட தலைமை மருத்துவ கல்லூரி இணை பேராசிரியர் திருலோகசந்திரன் கலந்து கொண்டனர். பள்ளி ஆசிரியர்கள் தனலட்சுமி, கலைவாணி, பள்ளி மாணவ, மாணவிகளுக்கு சிறப்பு பரிசுகள் வழங்கி கொண்டாடப்பட்டது.



திண்டுக்கல் மாவட்ட நிர்வாகம், மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையம், தமிழ்நாடு மாநில ஊரக/நகர்ப்புற வாழ்வாதார இயக்கம் ஆகியவை சார்பில் ஒட்டன்சத்திரம் கிறித்துவப் பாலிடெக்னிக் கல்லூரியில் நடைபெற்ற மாபெரும் தனியார்துறை வேலைவாய்ப்பு முகாமில் பணி வாய்ப்பு பெற்றவர்களுக்கு பணி நியமன ஆணைகளை வழங்கினார்.

Printed , published by A.PONRAJ and printed at "SRI SAAI PRINTERS"No.122,Neethipathi,Rajasekaran Street, vaarasanthai road,Sivaganga and published at 6 a, madurai road Sivaganga, Sivaganga district,Editor A.PONRAJ.8508502161